# கருத்தின்
# கருவூலப்

மருதமுனை வீ. ஸீ. ஏ. கரீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

069

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAHUMAN. A. JABBAS
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

# காலத்தின் காலடியில்

மருதமுனை எம். எச். ஏ. கரீம்

வெளியீடு - 02

மருதமுனைப் புலவர்மணி
ஆமூ சரிபுத்தீன்
கலை இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALATHTHIN KALADIYIL

A COLLECTION OF POEMS

BY: **M. H. A. CAREEM**
557K/5, Boundary Road, Maruthamunai.

FIRST EDITION: January - 1998

PUBLICATION - 02

BY:

Maruthamunaip Pulawar Mani
A.M. Sherifudeen Kalai Ilakkiya Mantram.
Maruthamunai.

PRINTED AT:

Abna Printing
165, Main Street,
Maruthamunai.

---

PRICE:- **60 . 00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. A. ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

அவர்கள் அன்புடன் வழங்கிய

## மதிப்புரை

## மருதமுனையின் மற்றொரு மைல்கல்

புதுக்கவிதை மோகம் மிகவேகமாகப் பரவி, எல்லோராலும் எழுதப்படலாம் என்ற பொய்யான மாயையால் அது மிக மிக மலினப்படுத்தப்பட்டது. எழுதிக்களைத்து இலக்கியச் சந்தையில் விலைபோகாத போது பேரற்றுப் போனதால் பலர் ஒதுங்கிக் கொண்டனர் சற்றுத் தெளிவோடு எழுதும் படைப்பாளிகள் சிலரே தமிழ் இலக்கியத்தின் புதுக்கவிதைச் சாகரத்தில் அழிந்து போகாது தம்மை நிலைப்படுத்திக் கொண்டனர்.

யாப்பின் பிடியிலிருந்து தமிழ்க்கவிதை இலக்கியத்தைச் சற்றுத் தளர்த்த முனைந்த யாப்பறிந்த சிலகவிஞர்களின் முயற்சி ஆரம்பத்தில் அவர்களால் ஒரு புதிய பரிமாணம் பெற்று நிலைபெற்ற போது, தமிழிலொரு வசனமேனும் எழுதத் தெரியாதவர்களெல்லாம் தமக்குக் "கவிஞர்" பட்டம் சூடிக்கொண்டனர் அப்போதுதான் இச்சிறுமையை உணர்ந்த 'மேத்தா' போன்ற புதுக்கவிதைச் சிற்பிகள் புதுக்கவிதை ராமனைக் காட்டுக்கனுப்ப முனைந்தனர்.

இவ்வாறான காலகட்டத்தில் கருத்தாழமிக்க கவிதைகளைச் சிலர் ஓசை அமைதியோடும் சரியான உத்திகளைக் கொண்ட புதுக்கவிதைகளாகவும் படைத்தளித்தனர். அவ்வாறான ஒரு சிலரில் ஒருவரே கவிஞர் கரீம் ஆவார் இவருடைய கவிதைகளே அதற்குச் சான்று பகர்கின்றன.

பேச்சு வழக்கு மொழியை தன் கவிதைகளிற் சேர்த்துக் கொண்டாலும், படைப்பிலக்கியச் சமரில் படு தோல்வி கண்ட சில விமர்சனப் புலிகளால் விதந்துரைக்கப்படும் சில படைப்பாளிகள் போல் கொச்சையான அடிமட்ட வார்த்தைப் பிரயோகங்களை இவர் தம் கவிதைகளில் கையாளவில்லை.

கருத்தைச் சொல்ல எவருக்கும் உரிமையுண்டு. ஆனால் கவிதை எழுதும் உரிமை கவிஞனுக்கு மட்டுமே உண்டு. யாப்பறிந்தவரெல்லாம் கவியாத்திட இயலா: அதற்கு இறையருளும் வேண்டும். யாப்பறிவில்லாமலேயே தமக்குப் பரிச்சயமான ஓசைகளுக்கேற்ப அற்புதக் கவிதைகளை எழுதும் திறன் பலருக்கு உண்டு. கவிஞர் கரீம் அவர்களுக்கும் இறையருள் உண்டென்பதை அவர் கவிதைகள் நிரூபணம் செய்கின்றன.

புதுக்கவிதையில் மட்டுமல்ல யாப்பமைதி கொண்ட கவிதைகளிலும் காலூன்றி நிற்கும் வல்லமை கவிஞர் கரீம் அவர்களுக்கு உண்டு. அவர் கவிதை வரிகளே அதற்குச் சான்று.

பொதுவாகக் கிழக்கிலங்கையும் சிறப்பாய் மருதமுனையும் கவிதை இலக்கியத்தில் சின்ன ஆலிம் அப்பா முதற்கொண்டு பெருமை பெற்று விளங்குகின்றது. தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் சிறந்த, சிறந்து கொண்டிருக்கும் பலர் இம்மண்ணின் மைந்தர்களே. அத்தகையவர்களின் வரிசையில் கவிஞர் கரீம் அவர்கள் கவிஞர்கள் வரிசையில் வைத்தெண்ணத்தக்க சிறப்புப் பெறுகின்றார். தன்நிலையை நிரந்தரமாக்கிகொள்ள மேலும் மேலும் எழுதவேண்டுமென அவரை ஊக்குவிப்பதில் நான் மகிழ்வடைகின்றேன்.

**29 - 09 - 1997** ''ஜின்னாஹ்''

ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் A. H. M. மஜீத் அவர்கள் அன்புடன் வழங்கிய

## வாழ்த்துரை

கவிஞர் கரீம் அவர்களின் 'காலத்தின் காலடியில்' என்ற இனிய கவிதைத்தொகுதியின் அழகான கை எழுத்துப் பிரதியை ஊன்றிப் படிக்கும் பேறு பெற்றேன்.

கரீம் அவர்களின் கற்பனை வளத்தை, கவிதை ஊற்றை தமிழாற்றலை வியந்து சுவைத்தேன்.

மனதை வாழ்க்கையை அதனுள் இணையும் இனிமையினை அவலங்களை மிக நுட்பமாக உள்வாங்கி பிற கவிஞர் எவருக்கும் சளைக்காத முதிர்ந்த முதலாம் தரக் கவிஞரைப் போல் இக் கவிதைகளை அவர் யாத்துள்ளார்.

அனைத்தும் உணர்ந்த கவிஞரைப் போல நடைமுறை வாழ்க்கையின் பகைப்புலனால் செம்மையாக அவர் தாக்கம் பெற்று அதன் உந்தலால் இக்கவிதைகளை அவர் படைத்துள்ளார் அமைதி, யுத்தம், தாய், தாரம், காதல், பரணைமென்று ஒன்றுக்கொன்று முரணான வாழ்க்கையில் தவிர்க்க முடியாத நிகழ்வுகளை நியதிகளை அவர் புதிய கோணத்தில் சொல்ல முயன்றுள்ளார்.

இக்கவிதைகளில் அதிகமானவை ஒலிமஞ்சரியில் ஒலித்தவை அதனால் வானொலி கேட்காத பல ஆர்வலர் இவற்றை படிக்கமுடியாத இழப்பை ஈடு செய்ய இத் தொகுதியை வெளியிடுகின்றார்.

கவிஞர் அவர்களின் எதிர்காலம் பிரகாசமானது அவர் நிறைய எழுதவேண்டும் உயர்வு பெற வேண்டும் அன்புடன் எனது நல்லாசிகள்,

எஸ் எம் வீதி,
மருதமுனை.

A. H. M. மஜீத்
(ஓ.பெ.க. பணிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே

நான் கவிதை படைப்பதில் மிகவும் இளையவனாக இருந்தும் என் 'காலத்தின் காலடியில்' உங்களுடன் கைகுலுக்கி நிற்கிறது. என் வாழ்க்கைதான் நானெழுதும் கவிதைகள். நல்லதோ தீயதோ என் இதயத்தில் அவ்வப்போது ஆணியாய் அறையப்படும் போது அதிலிருந்து சொட்டுச் சொட்டாய் வடியும் குருதியின் உருவம் தான் இது

புதுக்கவிதைக்கும், மரபுக்கவிதைக்கும் வெட்டுக்குத்து நடந்த காலத்தைத் தாண்டி அவ்விரு கவிதைகளும் முத்தமிட்டுக்கொள்ளும் இந்தப் பொன்னான காலத்தில் எனது கவிதை நூல் வெளியாவது என் மனதுக்குப் பூரிப்பைத் தருகின்றது.

என் கவிதைகளும் வாழ வேண்டும் என்ற ஆசை எல்லாக் கவிஞர்கள் போல் எனக்கும் இருக்கிறது. என் விருப்பத்தில் எழுதப்பட்ட கவிதைகள் உங்கள் இரசனைக்குப் பிடித்திருக்கலாம் அல்லது பிடிக்காமல் போகலாம். ஆனால் என் கவிதைவரிகளில் ஏதாவதொன்று யாருக்காவது பிடித்துப்போகலாம், யாராவது திருந்திப்போகப் பாதை செய்யலாம் அந்த ஒன்றேதான் என் வெற்றி.

நான் தமிழைக் கற்றுக்கொள்ள, கவிதைகள் வரைந்து செல்ல தான் கற்றதை எனக்கும் வழங்கிய என் ஆசான் கவிஞர் நயீம் ஷரிபுத்தீன் அதிபர் அவர்கள் என் இதயத்தில் என்றும் வாழும் பெரியார் என்பதில் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். இந்நூலை ''மருதமுனை புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் கலை இலக்கிய மன்றம்'' வெளியிடுவதில் நான் பேரானந்தம் அடைகிறேன்.

வாசக நெஞ்சங்களே! என் கவிதைகள் எனக்கு பிடித்திருக்கிறது. உங்களுக்கும் பிடிக்குமா? படித்து விட்டு பதிலைச் சொல்லுங்கள். உங்களின் தரமான விமர்சனங்கள் எனது அடுத்த கவிதைக்கு ஏணியாக அமையட்டும்.

557k/5, எல்லை வீதி,
மருதமுனை - 01.

என்றும் அன்புடன்,
எம். எச். ஏ. கரீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

தாயாகித் தந்தையாகி
இரண்டுக்கும் மேலாகி
நான் வளர நீரிறைத்த
எனதருமைத் தாய் மாமன்
அல்ஹாஜ் A. அப்துல் கபூர்
அவர்கட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | உம்மா | 09 - 10 |
| 02. | மனைவி | 11 - 12 |
| 03. | விதி | 13 - 14 |
| 04. | இது மனிதன் உண்ணும் காலமல்ல...... | 15 - 18 |
| 05. | என் காதலிக்கு! | 19 - 23 |
| 06. | மனிதனாகாத சிலருக்கு! | 24 - 25 |
| 07. | ஓயாத ஓலங்கள். | 26 - 28 |
| 08. | சொல்லுறத செய். | 29 - 30 |
| 09. | பாத்திரம் உடையும் ஓர் நாள் | 31 - 32 |
| 10. | என் கடன்கார நண்பர்களுக்கு! | 33 - 35 |
| 11. | இலவசம் | 36 |
| 12. | ஒரு காலம் வரும். | 37 - 38 |
| 13. | ஓடிப் போன அமைதி. | 39 - 40 |
| 14. | இதுதான் எங்கள் நிலை. | 41 |
| 15. | பொல்லாதவை. | 42 |
| 16. | மனித டயரியில் மறந்துபோன பக்கங்கள். | 43 - 44 |
| 17. | அவசரத் தேவை! | 45 - 47 |
| 18. | அவள். | 48 - 50 |
| 19. | காதல் ஒரு உலகம். | 51 - 52 |
| 20. | சுணை கெட்ட சீதனம். | 53 - 54 |
| 21. | காலத்தின் காலடியில். | 55 - 56 |
| 22. | எடுத்துத் தா புள்ளெ! | 57 - 59 |
| 23. | மூன்று காதலிகள். | 60 |
| 24. | என் பேனா முனை பேசுகிறது. | 61 - 64 |
| 25. | வெற்றிலை வேண்டாம் புள்ளெ! | 65 - 66 |
| 26. | தேர்தல் காலம். | 67 - 68 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உம்மா

இந்த
உலகப் பொய்யில்
நான் கண்ட
முதலாவது உண்மை

தன்னுயிருக்குள்
உயிர் சுமக்கும்
உலகத்தின் அதிசயம்

சிவப்புக் குருதிக்கு
வெள்ளை நிறம் தீட்டி
பாலாக வழங்கும்
இயற்கையின் 'கொம்பியூற்றர்'

தொழுத பாயிலிருந்து
தனக்காக எதுவும் கேளாமல்
நமக்காக 'து ஆ'ச் செய்யும்
பிறர் நலவாதி

காலைக் கண் விழிப்பில்
நான் காணத் துடிக்கும்
முதலாவது முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகச் சந்தையில்
இன்னுமொன்றாய்
வாங்க முடியாத
அரிய சொத்து

வாப்பாவுக்கு
வாழ்க்கையின்
முதலீடு.

தங்கைக்கு
பாதுகாப்பு மந்திரி.

எனக்கு
வாழ்க்கையின்
விலாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி

அன்று -
என்னிதய ஓட்டில்
அப்பிய
கரி.

அன்று -
என்
பார்வைக் கொப்பில்
படர்ந்த கொடி.

அன்று -
என்
வாலிப தேசத்தின்
காதல் தலை நகரம்.

அன்று -
உம்மா தந்த
சாப்பாட்டில்
''உப்பில்லை'' என்று
சும்மா சொல்ல வைத்த
''றிமோட் கொன்றோள்.''

இன்று -
என் இல்லற வாகனத்தின்
திகழ்கால எரி பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று
என் வாழ்க்கை அரசாங்கத்தின்
நீதி, அபிவிருத்தி
திட்டமிடல்
பாதுகாப்புத் துறைகளின்
மாண்புமிகு மந்திரி.

நாளை - என் -
வயோதிப வானத்தின்
நம்பிக்கைச் சூரியன்.

நாளை -
என் - முதுமை நடையின்
மூன்றாவது கால்.

நாளை -
என்னிறுதிக்காலத்து
இன்னுமொரு தாய்.

நாளை -
என் - இறுதிப்பயணத்தில்
ஏமாந்து நிற்கும்
பாதிப்பங்காளி.

● ஒலிமஞ்சரி 01-03-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

சூரியன் சொன்னது
மனிதா
என்னிடமிருக்கும் சக்தி
உன்னிடமிருந்திருந்தால்
இந்நேரம்
இவ்வுலகம் எரிக்கப்பட்டு
எத்தனையோ
வருடங்கள் முடிந்திருக்கும்.

கடல் கூறியது
மனிதனே
நானிருக்கும் நிலையில்
நீ
இருந்திருந்தால்
இவ்வுலக மக்களை
உனக்குள்ளாக்கி
ஆணம் வைத்துச்
சாப்பிட்டிருப்பாய்.

பூமி சொன்னது
மனிதா
எனக்கு நடக்கும்
அநீதிகள்
உனக்கு நடந்திருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த
உலக மக்களை
அதிர்ச்சியுண்டாக்கி
அழித்திருப்பாய்.

இதுபோல்.....
காற்றும் சொன்னது
நெருப்பும் சொன்னது
நீரும் சொன்னது.

இதையெல்லாம் பாத்திருந்த
இறைவன் சொன்னான்
எதற் கெது பொருத்தமென்று
எனக்குத் தெரியும்
அதனால்தான்
நான்
அதற்கதைப் படைத்திருக்கிறேன்
உங்கள் கடமைகளை
நீங்கள் செய்யுங்கள்
அதுதான்
உங்கள் விதி!

● ஒலிமஞ்சரி 25-01-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது மனிதன் உண்ணும் காலமல்ல....

வெட்டிய நெற்கதிரை
தொட்டுப் பார்க்கும் முன்னாலே
சிலர்
வெட்டுப் பட்டுக் கிடக்கின்றார்கள்
ஆம்!.
இது -
மனிதன்
உண்ணும் காலமல்ல
மனிதனை உண்ணும் காலம்!

கட்டிய கதிரைத் தூக்கி
கூட்டுக்கு வைக்கச் சென்ற
கூட்டத்தோர் சிலபேர்
துப்பாக்கிச்
சூட்டுக்கு இலக்காகி
இதோ!
போட்ட பாட்டிலே கிடக்கின்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை ஏற்றிவர
லொறி கொண்டு போனவர்கள்
முல்லைக் காட்டிலுள்ளே
ஸெல்லுக்கு இரையாகி - ரத்த
வெள்ளத்தில் கிடக்கின்றார்கள்!

கூனி வடிக்கச் சென்ற
குமரிகள் சிலதிங்கே
துப்பாக்கி
ஆணி அடித்ததனால்
கூனிப்போய் கிடக்கின்றார்கள்

மீனவர்கள் பலர் சேர்ந்து
போனார்கள் மீன் பிடிக்கப்
போனவாகள் போனார்கள்
ஏனவர்கள் திரும்பவில்லை!

அங்காடிகள் பல பேரு
எங்கெங்கோ போனார்கள்
இங்கே, இன்றும் திரும்பவில்லை
எங்கே என்றும் தெரியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகுகளை வெட்டி வந்து
வீதிகளில் விற்பவர்கள்
விறகோடு விறகாகி
அதனோடு சாம்பலாகி
முகவரியே தெரியாமல்
முடிவாகிப் போனார்கள்

முட்டை விற்கச் சென்ற
அந்த
மொட்டைக் கிழவர் கூட
வெட்டுப்பட்டுப் போனாராம்!
அவரின்
கட்டையை எடுக்கச்சென்ற
அந்த
எட்டு நபர்களுமே
வெட்டுப்பட்டுப் போனார்களாம்

பால்காறன் ஒருவனும்
கால் ரெண்டும் வெட்டுப்பட்டு
தோல் வேறு சதை வேறாய்
நீள் றோட்டில் கிடக்கின்றான்

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் தோறும் உணவு தேடி
அலைகின்ற மக்களினை
இங்கே
கொலை செய்வது
கலையாகி விட்டதனால்
மலை போன்று பசியிருந்தும்
மனிதன்
வழியின்றி வாடுகின்றான்
எனவே
இது -
மனிதன்
உண்ணும் காலமல்ல
மனிதனை உண்ணும் காலம்

● ஒலிமஞ்சரி 20-01-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் காதலிக்கு!

அடியேய் காதலி
ஆங்கிலத்தில்
உன் பெயரை
எழுதிப்
பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்
ஏன் தெரியுமா?
உன் பெயரின்
கடைசி எழுத்துக்களில்தான்
என் பெயரின்
ஆரம்ப எழுத்துக்களே
எட்டிப்பார்க்கின்றன

அடியேய் காதலி
நம் பெயர்கள் கூட
ஒன்றையொன்று
முத்தமிடுகின்றன
நம் உள்ளங்கள்
இரண்டென்ற வார்த்தைக்கே
இடம் கொடாமல்
ஒன்றாகவே இயங்குகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்
நம் வாழ்க்கை மட்டும்
இணைக்க முடியாமல்
போய் விட்டதைப் பார்த்தாயா?

அடியேய்
என் ப்ரியத்துக்குரியவளே
உன் முகவரி தவறியதால்
என் முகவரி
இறந்தே விட்டது;
அன்று -
உன்னோடு சேர்ந்து
நான் சேகரித்த
சந்தோசக் குண்டுகள்
இன்றைய
சோகக் கலவரத்தில் வெடித்து
கண்ணீர் தோட்டாக்களை
கக்கிக் கொண்டிருக்கிறது.

என்
தூக்கம் கூட
தூக்குப் போட்டு
செத்து விட்டது
என் இமைகள்
ஒன்றையொன்று முத்தமிட்டு
எத்தனையோ காலங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேய் ஸ்னேகிதி
என்
கண்ணீர் மழையை
தாங்கிக் கொண்ட
தலையணை
இன்னும்
வாங்கிக் கொள்ள முடியாமல்
தேங்கித் தேங்கியழுகின்றது.

அடியேய் காதலி
உன் உறவை
புளியங் காயாக
நினைத்தேன் நான்
ஆனால் நீயோ
புளியம் பழமும்
ஓடும் போல்
வைத்திருக்கின்றாயென்பதை
என்னால்
இப்போதுதானறிய முடிகிறது
அடியேய் காதலி
நீ செய்த துரோகத்தால்
என் தாடி கூட
வெள்ளி விழாக் கொண்டாடுகின்றது!

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று
உன் முன்னால்
மூக்கும் முழியுமாய்
நின்ற நான்;
இன்று -
இயற்கையின்
இலவச பொம்மையாகி
மூக்கும் சளியுமாக
நிற்கிறேனே
உனக்கு புரிகிறதா?
உனக்கெங்கே
புரியப் போகிறது
சேரலையும், அனுப்புதலையும்
தொலைத்து விட்டு
தவிக்குமென்னை
உனக்கெங்கே
புரியப் போகிறது?

அடியேய் காதலி
தற்கொலையும்
என் விடயத்தில்
தள்ளித்தான் நிற்கிறது
நஞ்சு மருந்து
வங்கப் போனால்
கடைக்காரன்
அத்தாட்சிப் பத்திரம் கேட்கிறான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரயில் தண்டவாளத்தில்
தலையை வைக்க
நான் போகும் நாட்களில்
ஊழியர்கள்
வேலை நிறுத்தமென்றும்,
ஊரடங்க சட்டமென்றும்,
ஹர்த்தாலென்றும்
காரணக் கோடுகள்
காட்சி தருகின்றன.
பார்த்தாயா காதலி
என்
பரிதாப நிலையை
விதி கூட
என்னை சதி செய்ய
முயலும் போது
என் மதியால்
மாற்றிக்கொள்ள முடியாமல்
மாட்டிக் கொண்டு
தவிக்கிறேன்.

● ஒலி மஞ்சரி 09 - 04 - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனாகாத சிலருக்கு!

பூமிமாவைப்பிசைந்து
வான ஓட்டில்
உரட்டி சுட்டுச்
சாப்பிடு;

கடல் மதுவை
உன்
பார்வைப் போத்தலில்
ஊற்றி
உன் -
வெறியடங்கும்வரை
குடி!

காற்றைப்
பிடித்து வந்து
உன் -
படுக்கையறைக்குள்
பணிப்பெண்ணாய்
வைத்துக்கொள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவைத்
தோசையாக்கி
மலர்களால்
சம்பல் செய்து
தொட்டுச் சாப்பிடு!

இந்த உலகத்தில்
இடம்
போதாவிட்டால்
வானத்திற்கு
அப்பால் போய்
வாடி கட்டு
அங்கேயும்
கடன் வை

இப்படியே
இன்னும் போ
உன்னாசை தீராவிட்டால்
உலகத்திலுள்ள
நஞ்சையெல்லாம்
குடித்துச் செத்துப்போ..........
அல்லது
மனிதனாகு!

● தினக்குரல் 29 - 06 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாத ஓலங்கள்

கட்டிய கயிற்றைத் தூக்கி
பெட்டிக்குள் வைத்துக் கொண்டு
ஒட்டிய வயிறுடனே
அவன் -
எட்டியே நடக்கின்றான்
பெரும் -
பட்டிணியை வென்று வர

மீனவன் என்னும் பேரில்
ஆனவன் இவனிடத்தில்
ஏனவன் என்று கேட்கப்
போனவன் யாருமில்லை

உப்பு நீரோடு
ஒப்பு செய்து கொண்டானவன்
இப்புவியில் அவன் வாழ்வு
எப்போதும் இப்படித்தான்

மிதக்கின்ற தோணியோடு
கதைக்கின்றான் - அவன் வாழ்வை
வதைக்கின்ற துன்பம் போக்க
உதைக்கின்றான் துடுப்பாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் பணமென்றும்
வராவிட்டால் பிணமென்றும்
சிந்திக்கும் அவன் வாழ்வை இங்கு
சிந்திப்போர் யாருமில்லை
உடலை தினந்தோறும் - இக்
கடலுக்கு உணவாக்கி
குடலுக்கு உணவு தேடி - இக்
கடலுக்குள்ளே அலைகிறான்

சூரை சுறாவும் படும்
கடும்
பாரை மீனும் படும் - பெரும்
பாறைகளில் சிக்கி விட்டால்
அவன்
பேரையும் மாற்றி விடும்

கண்ணீரில் மனைவி, மக்கள்
உப்புத் தண்ணீரில்
இவன் வாழ்வு
இது -
உண்ணுதற்கு உணவு தேடி
பண்ணுகின்ற முயற்சிகள் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வேளை தனில்
வேலைக்காக செல்லுமிவன்
காலை விடியும் வரை - இவன்
வேலை செய்வான் நடுக்கடலில்
இந்த
ஓலைக் குடிசையோனின்
ஓலங்கள்
ஓய்வது எப்போது?

ஒலிமஞ்சரி 19 - 05 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லுறத செய்

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

எலியளஞ்ச தேங்காய் போல
இருக்குதிந்த வீடு, வாசல்
ஈக்கில் கட்டைக் கொண்டு வந்து
இவற்றையெல்லாம் கூட்டு புள்ளே

பார்க்கும் இடமெல்லாம்
பானை சட்டி கிடக்கு புள்ளே - அதை
ஊரு சனம் பார்க்கும் முன்னே
ஓரிடத்தில் ஆக்கு புள்ளே!

வெங்காயமும் கொச்சிக்காயும்
வாசலெல்லாம் கிடக்கு புள்ளெ
தாங்காத வீண் விரயம் - ஒரு
தட்டுக்குள்ள பொறக்கு புள்ளே!

ஊத்தை உடுப் பெல்லாம்
ஊறிக் கிடக்கு புள்ளே - அது
நாத்தம் எடுக்கு முன்னே
நன்றாய் அதைக் கழுவு புள்ளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழியின் மலம் இந்தக்
குடிசையெல்லாம்கிடக்கு புள்ளே - ஒரு
தாளை எடுத்து வந்து அதை
தள்ளி அள்ளி எறியன் புள்ளே!

பத்து வருடம் வைத்து - நான்
பல முறை சொல்லி விட்டேன் - உன்
புத்திக்கு துப்புரவை
புரியுதில்லை இதுவரைக்கும்.

துப்பரவு இல்லை என்றால்
துப்பும் இந்த ஊருச் சனம்
இப்பொழுதே இவற்றை யெல்லாம்
இங்கிதமாய் செய்ரி புள்ளே!

● பவளம் 22 - 02 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திரம் உடையும் ஓர் நாள்

கொண்டிங்கு வந்ததென்ன
கூடவரப் போறதென்ன
நின்றிங்கு கொஞ்சக் காலம்
நேசமாய் வாழ்ந்த பின்னே
வந்திடும் மரணம் தானே
வரவினைச் செலவில் வைக்க
என்றதோர் உலகம் தன்னில்
எதற்கடா தம்பி சண்டை ?

வாடகை வீட்டைப் போல
வாழ்ந்திடும் உலகக் கூட்டில்
தேடியே இன்பம் சேர்த்துத்
தெருவிலே பகட்டுக் காட்டி
ஆடிடும் நடிகர் நாங்கள்
அலைவதும் கொஞ்சக் காலம்
ஓதடா மனிதா இங்கே
உதவுதல் ஒன்றுமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி தடுத்தாலென்ன
கண்ணீர் விட்டழுதாலென்ன
மாத்திரை மருந்தைப் போட்டு
மேனியைக் காத்தாலென்ன
சாத்திரம் பார்த்தாலென்ன
சரித்திரம் படைத்தாலென்ன
பாத்திரம் உடையுமோர் நாள்
பறந்திடும் உயிரும் அந் நாள்.

● சூடாமணி 05 - 05 - 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கடன்கார நண்பர்களுக்கு!

தேனீர் கடையை வைத்து
தித்திக்கும் உணவு செய்து
பாணும் பாற் சொதியும்
பக்குவாமாய் செய்து வைத்து
உண்ணத் தந்த என் கடனை
ஒழுங்குடனே முடித்திடாமல்
இன்னுமோர் கடைதனிலும்
இதனைத்தானே செய்கிறீர்கள்

ஆட்டா மாவுப் புட்டு வேண்டாம்
அரிசி மாவுப் புட்டென்றீர்கள்
கேட்டதைச் செய்து தந்து
காட்டினேன் அன்பை நானும்
கூட்டமாய் வந்தீர் உண்டீர்
கடன்களை எழுதி வைத்தீர்
ஓட்டமாய்ப் போன நீங்கள்
ஒழித்துத்தான் வாழ்வதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் பாடு பட்டவுடன்
வேண்டிய கடனைத் தருவேன்
என்று தான் சொல்லிக் கொண்டு
என் கடைப் பக்கம் வந்து
மீன் சொதியும் இடியப்பமும்
விரும்பிய பொரியல் களும்
உண்டுதான் போன அந்த
உமரையும் காணவில்லை

சாறன்கள் விற்றுவந்து
தருகிறேன் என்று சொல்லி
நேரங்கள் பார்த்து வந்து
நெய்யுடன் லட்டும் சேர்த்து
தோசையில் சாம்பார் போட்டு
சுடச் சுட உண்டு தீர்த்த
சுலைமான் காக்காவையும்
கடைப் பக்கம் காண வில்லை

அறுவடை செய்தவுடன்
அடைக்கிறேன் கடனையென்று
ஆயிரம் ரூபாய் வரை
அலுக்காமல் உண்ட கடனை
அறுவடை முடிந்த பின்பும்
அரைச் சதமும் தராமல் வாழும் - அந்த
அல்லாபிச்சை மாமாவையும்
அதிக நாளாய்க் காணவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ட கடன் கொடுக்க
முடியாத பேர் வழிகள்
என் கடனைத் தாவென்று
ஏழ்மையுடன் நான் கேட்டால் - உன்
சொத்தையை உடைப்பேனென
சுனை கெட்டுச் சொல்லுதுகள்
சந்திகளில் குந்திக் கொண்டு
சண்டித்தனம் பேசுதுகள்!

கண்ணிய மிக்க எந்தன்
கடன் கார நண்பர்களே
உண்ட பணத்தை நீங்கள்
உடன் கொண்டு தந்தீரானால்
எந்தன் கடன் முடித்து
இருந்திடுவேன் திம்மதியாய்
இல்லையென்று நீங்கள் சொன்னால்
இன்னுமொரு கவிதை வரும்!

● ஒலிமஞ்சரி 12 - 08 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசம்

சவூதியிலிருந்து
என் சம்சாரம் வந்தாள்
பார்க்கக் கவர்ச்சியான
பொம்மையொன்றும்
கொண்டு வந்தாள்
கம்பியூற்றர் குழந்தையென்று
குதூகலப் பட்டுக்கொண்டேன்
ஆனால்! ..... .. .
என் மனைவி
மார்பையெடுத்து
மகிழ்ச்சியுடன்
பாலூட்ட
''உயிருள்ளதா?''
என்று கேட்டேன்
ஆமென்று
பதிலளித்தாள்
ஏதென்று நான் கேட்டேன்
இலவசமாய்க்
கிடைத்ததென்றாள்!

● வீரகேசரி 05 - 06 - 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு காலம் வரும்

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

இப்போதிருக்கும் கொடுமைகள்
அப்போதிருக்காது.
எங்கு பார்த்தாலும்
மனிதப் புன்னகை மணக்கும்.

பிறக்கப் போகும் நாளைய குழந்தைகள்
கலவரமென்றால் என்னவென்று கேட்கும்.
உலகமெங்கும்
அமைதியின் கரங்கள் அன்புடனழைக்கும்.
ஆயுதங்களெல்லாம்
அடுப்புகளுக்கு விறகாய் உருமாறும்.

இன்று -
பயந்து பயந்து
பத்து மணித்தியாலங்களாக
நீண்டு கிடக்கும் பயணங்களெல்லாம்
இரண்டரை மணித்தியாலங்களாகி
சுதந்திரம் வழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஷெல்'' களெல்லாம் நெல்களாகி
உலக மக்களின் பசியைப் போக்கும்.
தொழில் தொழிலென்று தொழிலைத் தேடி
வாலிபர்கள் அலைந்த நிலைமாறி
வாலிபர்களைத் தேடி தொழில்கள் அலையும்
யுத்தங்களெல்லாம் முத்தங்களாய்
முகவரி மாற்றும்.

பேரின வாதங்களும் பிரிவினை வாதங்களும்
ஓரின வாதங்களாய்
மொழி மாற்றம் பெறும்.
வேலை நிறுத்தம் செய்யும் வேடிக்கைகள்மாறி
செய்யும் தொழிலே தெய்வமென்று
எல்லோரும் பக்தியோடு உழைப்பார்கள்.

மனிதர்களில் மிருகத்தைத் தேடி
சில இன்றைய மனிதர்கள்
அலைந்து கொண்டிருப்பார்கள்
ஆனால்
எங்கும் மனித மயமாகவேயிருக்கும்.
உண்மையின் எதிர்ச் சொல்
என்னவென்றறியாமல் எல்லோரும் தவிப்பர்
இதுபோல் ... ... இன்னும் ... ... இன்னும் ... ...

ஒலி மஞ்சரி 16 - 02 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிப் போன அமைதி

உலகைப் பார்க்கும் ஆசையில்
"அமைதி"
ஊர்வலம் வந்தது ..............

உலகை
நன்றாகப் பார்த்தவண்ணம்
அமைதி யோரிடத்தில்
அமைதியாக அமர்ந்தது

கலவரங்கள் வந்து
அமைதியின்
கழுத்தை நசுக்கியது
அமைதி
சத்தமாகக் கத்தியது
அது -
அமைதியென்பதால்
கத்தும் சத்தம்
எவனுக்கும் கேட்கவில்லை

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியைத் தேடி
அறிவாளிகள் நடந்தார்கள்
அது -
தூரத்தில் நின்று
பாவமென்று பூணூல் முணுத்தது

அமைதியைத் தேடி
அப்பாவிகள் நடந்தார்கள்
அது -
அவர்களின் கால்களுக்குள் வந்து
கண்ணீர் விட்டு நின்றது

அமைதியைத் தேடி
அரசியல் வாதிகளும் நடந்தார்கள்
ஐயோ
எனக்குப் பெயர் வைத்து
என்னை வாழ விடாமல்
இருட்டில் விட்டதே
இவர்கள் தானென்று
தலையிலடித்துக் கொண்டு
மீண்டும்
ஓடி மறைந்தது அமைதி.

● நவமணி 28 - 02 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் எங்கள் நிலை

தமிழிலுள்ள
வல்லினம், மெல்லினம் என்பதெல்லாம்
படிப்பதற்குக் கொடுத்து வைக்காத நாங்கள்;
இந்த நெல்லினத்தைப் பற்றி
நிறையவே படித்திருக்கின்றோம்!

''தைபிறந்தால் வழிபிறக்கும்'' என்பார்கள்
உண்மைதான்
அது எங்களுக்கல்ல
எங்களை வைத்து வேலை வாங்குவோர்க்கு!

நாங்கள்
இந்த வயல் வெளியை நோக்கி
தினமும் வருகின்றோம் போகின்றோம்
ஆனால் -
வறுமை எங்களை விட்டுப்
பிரிந்துபோக மறந்து விட்டது!
சேற்றுக்குள் சோறு தேடும் எங்களுக்கு
இன்பத்தின் முகவரியை
இது வரையும் தெரியாது!

● வீரகேசரி 10 - 02 - 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லாதவை

இரவுகளில் ஊரை உசுப்பி
ராகம் பாடும் ஆயுதங்கள்.
ஆளை அடித்து விட்டு
அப்பால் போகும் வாகனங்கள்.

உயிரைக் குடித்து விட்டு
உசும்பாமலிருக்கும் மின்சாரம்.
உள்ளதைச் சொல்லாமல்
உதட்டு மூடியால் மறைக்கும் சம்சாரம்

வானத்தில் பறந்து மலம் பீச்சி
மக்களைக் கொல்லும் யுத்த விமானம்.
அரசியல் வாதிகளிடம்
ஐந்தாண்டிற்கு ஒரு முறை மலரும்
வாக்குப் பூக்கள்.

நோயாளிகளின் நிலைமை புரியாமல்
அடிக்கடி வேலையை நிறுத்தும் வைத்தியர்
குற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்கும்
சில லஞ்சப் பெரியார்கள்.
இதுபோன்று ......... ?

நவமணி 13 - 04 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித டயரியில்
# மறந்து போன பக்கங்கள்

வில்லை விட்டுப்
பாய்ந்து விட்ட அம்பு போல்
இந்த மனிதர்கள்
கல்பை விட்டுப்
பாய்ந்து விட்டது ஈமான்.

கறுப்பு வெளிச்சத்தில்
இதயத்தை தொலைத்து விட்டு
குருட்டு கண்களால் தேடுகிறார்கள்.

அரிசியில் கல்லை கலந்து
விற்பனை செய்யும்
வியாபாரி போல்
இல்லாத ஒன்றை
இஸ்லாத்தில் சேர்த்துத்
தங்களைத் தாங்களே
மார்க்க மேதைகளாய்
பிரகடனப்படுத்துகிறார்கள்.

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கைப் புத்தகத்தை எரித்து
சாம்பலப்பம்
சுட்டு விளையாடுவதை
வாடிக்கையாய்ச் செய்கிறார்கள்.
மறுமைக் காலத்து
நரகக் கிடங்குகளைத் தேடி
மனித உருவிலே
பாவ விளக்கோடு அலைகிறார்கள்.

ஆறறிவில் ஓரறிவைத்
தொலைத்து விட்டு
அகிலத்திற்குக் கறுப்பு மை பூசி
களங்கப் படுத்துவதோடு
வெறும் ஆசைச் சாக்குகளை
தூக்க முடியாமல்
தூக்கும் இவர்கள் தான்
மனித டயரியில்
மறந்து போன பக்கங்கள்.

இனிய இளைஞனே
மறந்து போன பக்கத்தின் பின்னால்
நீ ஏன் இறந்து போகின்றாய்?

இளைஞர் இதயம் 13 - 01 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரத் தேவை!

இது மனித மாமிசங்களின் விற்பனைக் காலம்
கூடப் பிறந்தவனின் குடலைச் சாப்பிட
இவர்களுக்கு அப்படி என்ன பசி?

இங்கே... ....
மனிதர்கள் யாராவதிருந்தால்
கண்ணை விழித்துப் பாருங்கள்
அகோரமான பிடிவாதங்களினால்
மரித்துக் கொண்டிருக்கும்
மனித முகவரிகளை!

ஆயுத மாத்திரை போட்டும்
அடங்காத வாதத்திற்கு
மனிதக் குருதிகள் நீராகாரமாகி விட்டன

அதோ ... ....
இரவோடு உயிருடனிருந்தவர்கள்
காலையாவதற்குள்
காற்றுப் போய்
கட்டையாய் கிடக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே ..........
கொல்பவனும் கொல்லப்படுபவனும்
ஆதாம் ஏவாளின்
அருமைப் பிள்ளைகள்தான் என்பதை
ஆராய்ந்து பார்க்க யாருக்கும் நேரமில்லை.
ஆயுதங்கள் தான்
அறிவில்லாத பிறவிகளென்றால்
நாம்கூட அதே வழிதானா?

இன்றைய கனவுகளில் கூட
ஆயுதங்களைக் கண்டு கண்டு
அலுத்துப் போய் விட்டது
வண்டுகளைக் காணாத
மலர்த் தோட்டங்கள்
குண்டுகளைக் கண்டு
குமுறிக் கொண்டிருக்கிறது

முன்பெல்லாம்
பண்டிகை நாட்களில்தான்
பட்டாசு கொளுத்துவார்கள்
இப்போதெல்லாம் அப்படியல்ல
மனிதனை மனிதன் கண்டாலே
பண்டிகைதான்
நவீன ஆயுதங்களால்
பட்டாசு கொழுத்தி
கொல்லப்படுபவனின் தோலால்
சட்டை தைத்துக்கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வாழ முடியாத போது
வயிற்றையும் பசியையும் பற்றி
நினைத்துப் பார்க்க
எவருக்கும் நேரமில்லை.
இம்போதெல்லாம்
பசியில் வாடும் மனிதனுக்கு
உணவை விடவும் முக்கியமாக
சமாதானம் தேவைப்படுகிறது!

ஆம் -
இதுவொரு அவசரத் தேவை
நாம் வாழ வேண்டும்
நம்மில் வாழும்
''நான்'' என்ற திமிர்
நம்மை விட்டகல வேண்டும்
அப்போதுதான்
அமைதி மழை
இந்த
அகிலத்தில் பொழியும்.

ஒலிமஞ்சரி 17 - 08 - 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள்

தினமும்
என்னிதயத்தில்
குத்திக்கொண்டேயிருக்கும்
நுளம்பு!

என்
தூக்கத்தை
ஏக்கமாக்கும்
நவீன மாத்திரை

வார்த்தைகளை
வசனமாக்கும்
நவீன கணனி

நிமிசங்களை
வருசமாக்கி,
வருசங்களை
நிமிசமாக்கும்
காலத்தின் சூகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய
நினைவை மட்டும்
உணவாய்த் தந்து
என்
வயிற்றுப் பசியை
மறக்கடிக்கும்
பயங்கரச் சோறு

இரவு நேரத்தில்
என் -
இமைத் தட்டிகளை
சாத்தவிடாமல்
இடையில் நின்று
தாங்கிக் கொள்ளும்
முட்டு

அவள்
உயிருடன்
இருந்துகொண்டே
என்னை
அழவைக்கும்
கை, வாய் கட்டாத
மையித்து

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான்'' என்ற
மனித மரத்தில்
இதயக் காய்பறிக்கும்
புன்னகைக் கத்திக்கம்பு

மொத்தத்தில்
என்னை
''எழுதடா'' என்று
நிர்ப்பந்திக்கும்
ஒரு
சர்வதிகாரி.

MANIKKAM, A. MATHURAI HOTEL ROAD, HANUMANTHAPURAM

● இதயசங்கமம் 21 - 10 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் ஒரு உலகம்

கண்ணே!
உன்னிதயக் கூரைக்கு
இரும்பால் ஓடு போட்டுவிடாதே
என்னிதயத்தை
உனக்குள்
எடுத்துக் கொள்ளும் வரைக்கும்.

உன் -
சின்ன விழி வலையில்
என் இதயமீன்
சிக்கிக் கிடக்கிறது
பலஸ்தீன தேசம்போல்

அதை
கருவாடாக்கி விடாமல்
காதலாக்கிக் கொள்
ஷாஜஹானின் மும்தாஜ் போல

அன்புள்ள பூவே
உன்னழகை அள்ளி வந்து
நான் தூக்கத்திலிருக்கும் போது
தூவி விட்டுப் போகின்றன
கனவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்
மல்லிகை மலர்ந்து மணந்தரும் போது
நானுன்னை நினைக்கிறேன்
ஈராக் ஜனாதிபதி
குவைத்தை நினைப்பது போல்

நீ -
விலையுள்ள பொருளென்றால்
நானுன்னை
எப்போதோ வாங்கியிருப்பேன்.
நீயோ
இந்தியாவிற்கும், பாக்கிஸ்த்தானுக்கும்
தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கும்
காஷ்மிர் ஆப்பிள் தோட்டம்.

கண்ணே!
உன்னால்
தொலைந்து கொண்டிருக்கிறது
என் இதயம்
அரசியல் வாதிகளை விட்டு
உண்மை தொலைவது போல்

கண்ணே!
இன்னும் பொறுமை வேண்டாம்
வா! நம்மில்லறத்தில்
ஒரு சிங்கப்பூரை சிருஷ்டிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுணை கெட்ட சீதனம்

பிச்சைக் காரக் கூட்டமொன்று
பிறந்திருக்கு ஊருக்குள்ளே
கச்சையைக் கட்டிக் கொண்டு
கைக் கூலிக் கலையிதுகள்

மாடி மனை கேட்கிதுகள்
மாருதியும் கேட்கிதுகள்
கோடி ரூபாய் கொண்டுவந்தால்
ஓடிவரப் பார்க்கிதுகள்

அம்மாவுக்குப் பால் காசு
அப்பாவுக்கு வளர்ப்புக் காசு
சும்மா சும்மா காரணத்தை
சுணை கெட்டுச் சொல்லுதுகள்

சீதை வழி வந்த பெண்கள்
சீதனத்தால் கண்ணீர் சிந்த
இராமர் வழி வந்த பிள்ளை
இதயம் கெட்டு நிற்கிதுகள்

கடலுக்கு சப்தம் தர
அலைகள் வந்து கூலி கேட்டால்
கடவுளிடம் சொல்லியொரு
கருணை மனு பெற்றிடலாம்

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1 HIJRA ROAD
MARUTHAMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுக்கு ஒளியைத் தர
நிலவு வந்த கூலி கேட்டால்
இறைவனிடம் "துஆச்" செய்து
இரங்கலொன்று வாங்கிடலாம்

மலருக்குள் தேனையள்ள
வண்டு வந்து கூலி கேட்டால்
பழைய செருப் பெடுத்து
பல்லுடையச் சாத்திடலாம்

ஆறறிவு கொண்டவர்கள்
அடையப் போகும் இன்பத்திற்கு
வேறு வேறாய்க் கூலி கேட்டால்
யாரிடம் போய்ச் சொல்லுவது?

தங்கச்சி மார்கள் சேர்ந்து
திருமணத்தை பகிஸ்கரித்தால்
அண்ணாச்சி மார்களெல்லாம்
அடிபணிவர் உங்களிடம்!

● இதயசங்கமம் 02 - 10 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் காலடியில்

காதலில் தோல்விக்காக
கவிதையை வரைந்தெடுத்து
ஆதலிங் கேதுமில்லை
அகலுவோம் அதனை விட்டு

பெண்மையின் விழியினுள்ளே
புதை பொருள் ஒன்றுமில்லை - நீ
மண்ணையே காக்கும் பாட்டு
மனதாறப் பாடுதம்பி!

கண்ணுக்குப் பாட்டெழுதிக்
கண்ட பலன் ஒன்றுமில்லை - மனித
புண்ணுக்கு மருந்து தரும்
புதுப் பாட்டைச் சொல்லு தம்பி!

பல்லை முத்தென்று
பாட்டெழுதி என்ன பயன்
நெல்லைப் பெருக்கும் வழி
சொல்லியொரு பாட்டெழுது!

கூந்தலில் மீன் பிடித்து
கறிக்கு வந்து சேராது
குந்திருந்து திராய் பிடுங்கு
கண்டி நாலு சோறு உண்பாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லழகு தானிருந்தும்
சோற்றுக்கு வழி தெரியாப்
பல்லழகை நீ பாடி
பசியினிலே வாடலாமோ?

இரவெல்லாம் அவள் நினைவால்
உறக்கமில்லை என்றெழுதி
இறக்கும் வரைக்கும் நீ
என்ன செய்வாய் சொல்லு தம்பி!

மாய்ச்சல் காரனுக்கு
மரணக்குழி காலுக்குள்ளே
மாய்ச்சலை விட்டுத் தள்ளி
மடிச்சிக் கட்டு வயலுக்குள்ளே!

உந்தன் ஒருத்தியவள்
எங்கோ பிறந்திருப்பாள்
வந்து அவள் சேரும் வரை
வாழ வழி செய்டா தம்பி!

சிந்தனையை இன்னுமொரு
சிறுக்கியிடம் கொடுத்து விட்டு - உன்
சுந்தரப் பொழுதுகளை
சோகத்தில் ஆக்கிடாதே!

❁ ஒலிமஞ்சரி 26 - 02 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்துத் தா புள்ளெ!

எடுத்துத் தா புள்ளெ
என் பேனாவின் மூடியினை
பூட்டி வைக்கப் போகிறேன் - இனி
புதிசாய் ஒன்றும் எழுதாமல்

பொல்லாமை இருளுக்குள்ளே
புதையல் தேடும் மனிதனுக்கு - இனி
சொல்லிச் சொல்லி அலுத்துப்போச்சி - என்
சிந்தனைதான் வீணாய்ப் போச்சி

நல்லவன்தான் மனிதனென்று - நான்
நாலு வார்த்தை சொல்லிப் பார்த்தேன் - அது
கல்லில் போட்ட விதை போல
காய்ந்து போய்க் கிடக்கு புள்ளெ

கத்தி முனை கொண்டு - தினம்
முத்தம் இடும் மனிதர்களை
என் பேனா முனையாலே
இனித் திருத்த முடியாது

ஆயிரம் கவிஞன் இந்த
அகிலத்தில் எழுதி வைத்தும்
ஆறறிவு கொண்டவரை
யாராலும் திருத்த ஏலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தக் கடலுக்குள்ளே
யுத்தப் படகோட்டு
பித்தம் இனி வேண்டாமென்றேன் - அது
ஒருத்தனுக்கும் கேட்க வில்லை

ஆயுள் அதிக மென்று
அனைவரும் நினைக்கையிலே - என்
செய்யுள் பொருள்களெல்லாம் - எவர்
சிந்தனைக்கும் எட்டவில்லை

தாலி கட்டும் வேளையிலே
கூலி கேட்கும் வாலிபனை
கேலி செய்தும் எழுதிப் பார்த்தேன் - ஆனால்
கைக்கூலி பிச்சைக் காரன்
கடுகளவும் குறையவில்லை

கருவிலே இருக்கும் போது - சிசுவைக்
கல்லறைக்கு அனுப்புகின்ற
கல் நெஞ்சக் காரர்களை
கடுமையாக எழுதிப் பார்த்தேன் - அது
எருமை மாட்டின் மேல் பொழிந்த
மழையைப் போல ஆகிப் போச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திகளில் குந்திக் கொண்டு
ஊரார் வம்பு பேசுகின்ற
மந்திக் குணங்களுக்கும்
மனம் மாறக் கவி படைத்தேன்
அவர் சிந்தனைக்கு அவையொன்றும்
சிறந்த வழி காட்ட வில்லை

பணம், புகழ், பட்டமென்றும்
பாராட்டு விழாக்களென்றும்
மனம் போல வழியில் சென்ற
மக்களுக்கும் கவி படைத்தேன் - அது
பிணத்தின் மேல் போட்ட
மணம் போன ஆச்சு புள்ளெ

அவனை அவன் அறியும் வரை
என் கவிகள் என்ன செய்யும்?
''நான்'' என்ற திமிரிருக்க
நான் வடிக்கும் கவி எதற்கு?
எடுத்துத் தா புள்ளெ
என் பேனாவின் மூடியினை
பூட்டிவைக்கப் போகிறேன்
இனிப் புதுசாய் ஒன்றும் எழுதாமல்

● ஒலிமஞ்சரி 10 - 10 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று காதலிகள்

இளைஞன் ஒருவன்
மாரடைப்பால்
மரணித்து விட்டான்
அதனைத் தொடர்ந்து
மூன்று
இளம் பெண்கள்
தற்கொலை
செய்து கொண்டனர்
ஏனென்று கேட்டால் .......
அந்த
இளைஞனுக்கு
இவர்கள் மூவரும்
உயிர்க் காதலிகளாம்
பாவம்
அந்த ஒருவனுக்கு
மூன்று காதலிகள்
என்ற விடயம்
இந்த
மூன்று பேதையர்க்கும்
தெரியவே
தெரியாதாம்!

● மித்திரன் வாரமலர் 15 - 04 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பேனா முனை பேசுகிறது

இந்தக்காலம்
உயிரைத் தொலைத்து விட்டு
பீதியை விதைத்துக் கொள்ளும்
ஒரு பரிதாப காலம்
இங்கே மனிதம் இல்லை
அதனால் -
மனச்சாட்சி மறைந்து கிடக்கிறது.

மனச்சாட்சியோடு வாழும்
மனிதர்கள் யாராவது இருந்தால்
தயவு செய்து இங்கே நடக்கும்
இடர் பாடுகளுக்கு
ஒரு முடிவு சொல்லுங்கள்.

காலம் -
இரத்தத்தில் பிறந்து
யுத்தத்தில் அஸ்த்தமிக்கிறது.

இனம் இனமாய்
எல்லோரும் சண்டை செய்கிறார்கள்
ஓடிப்போய்ப் பார்த்தால்
உயிரைத் தொலைத்து விட்டு
ஒற்றுமையாய் உறங்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் வாழ்ந்த போது
சுந்தனாக, கலீலாக, கருணாவாகப்
பிரிந்து நின்று பேதம் பேசியவர்கள்
இதோ.........
ஒரே இரத்தம்
ஒரே உறக்கம்
ஆம்!
பிணங்கள் என்ற
பன்மைப் பெயரில்
ஒற்றுமையாக உறங்குகிறார்கள்

இவர்களுக்கிடையில்
அப்போது -
குறுக்கே நின்றது என்ன?
அறியாமையா? புரியாமையா?
எல்லாம் புரியாத புதிர்கள்

மனிதமே
நன்றாக யோசித்துப்பார்!
''உலகம்''
இது ஒரு சுடுகாடு
இங்கே
நாமெடுத்துச் செல்ல
எதுவுமே இடையாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலம்''
இதுவொரு அவகாசக் குறி
நாம் -
அனுபவித்துக் கொள்ளாவிட்டால்
மீண்டும் கிடைக்குமாவென்பது
கேள்விக் குறி

''ஆசை''
இது -
நமது வாழ்க்கைக்கு கிடைக்கும்
ஆயுள் தண்டனை
''புகழ்''
மனித இதயங்களை
மடமைப் படுத்தும்
வித்தியாச விலாசம்

''வேற்றுமை''
தாகத்தில் தவிப்பவனுக்கு
விஷத்தைக் கொடுக்கச் சொல்லும்
விசித்திரப் பிறவி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு, அன்பு, காதல், கருணை
இது -
வெந்த பின்பும்
மணம் பரப்பும்
கறிவேப்பிலை போன்றது
ஆம்!
மேற் சொன்ன நான்கும்
நீ மறைந்த பின்பும்
உன்னை வாழ வைக்கும்
அற்புதக் குறியீடுகள்

மனிதா!
உன் சார்பாக
நாம் நமது என நான் பேசினேன்
இனி -
நல்ல பாதைகளெல்லாம்
உனக்காகத்தான்!
நட!
நல்லதைப் பார், நல்லதைச் செய்
நாட்டை ஒற்றுமையாக்கு.

ஒலிமஞ்சரி 04 06 - 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலை வேண்டாம் புள்ளெ!

வெற்றிலையும்,
பாக்கும், சுண்ணாம்பும்
நீ -
விரும்பியே சுவைக்கும்
புகையிலையும்
நாளை
புற்று நோய் உன்னை வாட்டும்புள்ளெ
என் -
புத்தியைக் கவனமாய்
கேளு புள்ளெ!
சத்துள்ள உணவை
நீ மறந்து
தினம்
சாப்பிடும்
வெற்றிலை பாக்குகளால்
சுத்தமாய் இல்லை
நம் இல்லம்
நீ -
துப்பிடும்
வெற்றிலைச் சாற்றாலே!
வட்டாவைப்
படிக்கத்தை
வைத்துக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலிலே தினம்
குந்திக் கொண்டு
கூட்டாளி சிலரையும்
சேர்த்துக் கொண்டு
கூடியே
வெற்றிலை
சப்பிக்கொண்டு
ஊரார் பலாய்களைப்
பேசித்தள்ளும்; இந்த
உதவாத வேலையை
விட்டுடு புள்ளெ!
அடுப்பில் எரிந்த கரிபோல
ஆகிப்போச்சி உன் பல்லு
இனி -
தடுக்கும்
வழியைச் சொல்லுகிறேன்
இதை தயவுடன்
நீயும்
கேட்டுக் கொண்டு
அடுத்தவரிடமும் இதைச் சொல்லி
தினம் -
அஞ்சாறு ரூபாவை மிச்சம் பிடி!

● வீரகேசரி வாரவெளியீடு 04 07 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலம்

அரசியல் வாதிகளின்
உள்ளக் கிடங்கில்
உண்மைப் பூக்கள்
உறங்கிக் கிடக்கும்

ஒலிவாங்கிகளும்
ஓராயிரம் பொய்களை
உண்மையாக்கி
முலாம் பூசும்

RAHUMAN. A. JABBAR
TEACHER
203A/1, HIJRA ROAD
MARUTHAMUNAI

வாக்குறுதிச் சாக்குகள்
வேட்பாளர்களின்
வாய் வழியாக
வந்து குவியும்

தகைமையில்லாத
தறுதலைக் கூட்டங்கள்
பதவிப் பழம் உண்ண
பறந்து திரியும்

அடாவடித் தனங்கள்
கட்டுடைக்கப்பட்டு
சமுதாயச் சந்தையில்
சுதந்திரமாய் உலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில
உழைக்கத் தெரியாத
ஊதாரிக் கூட்டங்கள்
ஒரு
கட்சியின் வாலை
களமாய்ப் பிடித்துக்கொண்டு
கஞ்சிக்காய் தினமலையும்

சிலவாக்காளர் கூட்டங்கள்
தங்கள் வாக்குச் சீட்டுக்களை
சாராயப் போத்தலுக்காய்
சந்தியில் விலை பேசும்

மொத்தத்தில்
பொய்களெல்லாம் ஒன்றிணைந்து
புதுயுகம் படைத்திடப்
போட்டியிட்டுக் கொண்டிருக்கும்.

● கலைக்கதம்பம் 15 - 03 - 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

மதிப்புரை தந்த கவிஞர் ''ஜின்னாஹ்''
வாழ்த்துரை வழங்கிய A.H.M. மஜீத் (ஓ. பெ. க. பணிப்பாளர்)
முன் அட்டை வரைந்த மருதூர் ஏ. முஹம்மது தமீம்
புத்தகப் பதிப்புரை செய்த
''அப்னா'' உரிமையாளர் U. L. M. நஜிப்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை யில் என் கவிதைகளுக்கு குரலால் உயிர் கொடுத்த

B. H. அப்துல் ஹமீது (ஒலிமஞ்சரி)
அமரர் பல்கலைவேந்தன் சில்லையூர்செல்வராஜன் (பாவளம்)
S. முஹமது ஹனிபா ஹாபிஸ் (இளைஞர் இதயம்)
அமரர்சறா இமனுவேல் (ஒலிமஞ்சரி)
K. ஜெயக்கிருஸ்ணா (வாலிப வட்டம்)
C. நடராஜசிவம் (விகடத் தடாகம்)
R. சந்திரமோகன் (ஒலிமஞ்சரி)
நீலாபாலன் (கவிதைக் கலவசம்)

என் கவி வரிகளை மெல்லிசைப் பாடலாக்கி அதற்கு களமமைத்துத் தந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைக் கட்டுப்பாட்டாளர்
கலாசூரி அருந்ததி சிறீரங்கராதன்

என் பாடல்களுக்கு களம் தந்த
K. M. ஸவாஹிர், A. மகேந்திரன், இசையொளி T. F. லத்தீப், M. S. செல்வராஜா, சரத் விக்கிரம, கிங்ஸ்லி பெர்னாண்டோ

என் கவிதைகளுக்குக் இடம் தந்த
வீரகேசரி, தினகரன், தினக்குரல், சூடாமணி, நவமணி, சங்கமம், மித்திரன், அல்ஹஸனாத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானொலிக் கவிதை சொல்லழகை நயப்பவை. பேச்சு வடிவத்திற்காய் ஏங்கிக் கிடப்பவை. தனிக்கைகளால் வடிக்கப்பட்டு ஒலிக்கப்பண்ணப்படுபவை. ஆக செப்போசை என்பார்களே அதை கைகளில் பிடித்துக் கொண்டு தொகுதியாகவே நம் முன்னால் அமர்ந்திருக்கிறார் கரீம். இதயத்தால் பேசுவதற்கு மனிதாபிமானமும்,அன்பும் இருந்தால் போதும்.

மருதூர் ஏ முஹம்மது தமீம்.

WRAPPER CONCEPT THASEEM. COMPUTER GRAPHICS DAAFIR CREATIONS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY "ABNA OFFSET PRINTING." MAIN STREET, MARUTHAMUNAI.